# இசைக்கலை

## பாட்டு - 1

*ராகம் : ஹம்ஸாநந்தி* *தாளம் : ஆதி*

(பல்லவி)

**சோலையிற் பூத்தநிலா! வானப்பசும் பூஞ் (சோ)**

**தத்தை** : ஆஹா!

(அநுபல்லவி)

பாகன் : **கோலமென் சொல்வேன் பூமா தேவியின்**
**குடையோ மணித்தீப ஒளியோ காணேன் (சோ)**

**தத்தை** : ஐயோ!

பாகன் : **சந்த்ரிகைக் கரத்தால் சகலமும் தழுவி**
**விந்தை செய்கின்ற தெந்த விதமோ? காணேன் (சோ)**

## களம் - 4

சுநீதி : அம்மா, அவன் பாட்டு இனிமையானது. அவன் உடல், நோய் மொய்த்த உடல். குரூபி. பார்க்க சகிக்கவில்லை.

**தத்தை** : நீ பார்த்தாயா அவரை? எங்கேயிருக்கிறார்?

சுநீதி : யானை கட்டும் கூடத்தில். அவன் யானைப் பாகனாயிருந் தவன், அரசாங்கத்தின் பழைய ஊழியன் அம்மா.

**தத்தை** : நீ இரு, இங்கே.

சுநீதி : அம்மா, நீங்கள் அவனை நாடிப் போகலாமா?

**தத்தை** : இசைக்கலைக்காக... ...

சுநீதி : போகின்றீர்களா? ஐயோ, அம்மா நானும் வரட்டுமா?

---

*இந் நாடகத்தில் முதல் மூன்று களங்கள் கிடைக்கப் பெறவில்லை.

**'பாரதிதாசனின் புதிய நாடகங்கள்' – என்ற நூலின் இறுதியில் 'அச்சில் வெளிவராத பாடல்கள்' என்று இணைக்கப்பட்ட பாடல்களை இந் நாடகத்தில் உரிய பகுதிகளில் இணைத்துள்ளோம்.

தத்தை : தனியே போகிறேன் (போதல்)

சுநீதி : ஆ! என்ன அந்யாயம்!

## கற்பைப் பரிசளித்தாள்

## களம் - 5

தத்தை : இந்த இருட்டிலா மறைந்திருக்கிறீர்கள்?

பாகன் : யாரங்கே?

தத்தை : நானா? உங்களிடமுள்ள இசைக்கலையாகிய சொத்தை இச்சித்த ராணி, தத்தை.

பாகன் : அப்படியா, என்னிடம் வரக்காரணம் என்ன தாயே?

தத்தை : பார்த்துப் போக வந்தேன்.

பாகன் : என்னை நீங்கள் பார்க்க வேண்டாம். என் பாட்டில் பிரியம் இருந்தால் பாடுகின்றேன் கேளுங்கள்.

தத்தை : இல்லை. பார்க்க வேண்டும் என்பதுதான் என் முதல் அவா.

பாகன் : வேண்டாம் அம்மா.

தத்தை : கெஞ்சுகின்றேன் ஐயா.

பாகன் : நான் குரூபி.

தத்தை : இல்லை. இசைக் கலையின் சொரூபி.

பாகன் : கேட்கமாட்டேன் என்கிறீர்களே. விளக்கேற்றுகின்றேன். பார்த்தீர்களா? என்னை!

தத்தை : ஆஹா! தமிழ் மணக்கும் மலர் உதடுகள். இசை சுரக்கும் ஆநந்த இருதயம். கலையின் புகழ் கனிந்த திருமேனி, நான் உங்கள் பக்கத்தில் உட்காருவதில் பெருமை கொள்ளுகின்றேன். இதோ என் முதற்பரிசு – இந்தத் தாம்பூலத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.

பாகன் : என்ன விந்தை! நீங்கள் ராணி, நான் நோயாளி, இந்த சரசம் அடுக்குமா?

தத்தை : கண்ணாளரே, உங்களை நீங்கள் குறைவுபடுத்திப் பேசுவதை என்னால் சகிக்க முடியவில்லை. என்னை அங்கீகரிப்பது உங்கள் கடமை. ஒரே வார்த்தை நீங்களும் நானும் ஆவியும் உடலும் ... ...

**பாட்டு - 2**

நவீன சதாரம், உன்றனைக் கண்ட அன்றுமுதல்
என் உள்ளத்தில் காதல் கொண்டேன் - என்ற மெட்டு

**சீதள தேகம் தணல்படுவதும் எதனால்?**
**தேன் கசந்திடுவதும் ஏனோ, நாதா?**
**காதகத் தென்றல் சீறுதல் ஏனோ?**
**காரணம் உரைத்திட வாராய், மாரா!**

பாகன் : (மேற்படி மெட்டு)

**மாதினந் தேகம் குளிர்ந்திட வழி உளதே!**
**மாமது வினிற்சுவை போமோ மானே?**
**தீதகல் தென்றல் சீறலும் தீரும்!**
**சீக்கிரம் மதனது நூலா ராய்வாய்!"**

பாகன் : பெண்ணே. என்னை இன்பத்தில் ஆழ்த்தி விட்டாய். இனி உன்னை மறந்திருக்க என்னால் முடியாது.

தத்தை : கவலையேன்? நான் உங்களிடம் வராத நேரமெல்லாம் துன்ப நேரம். நான் போய் வருகின்றேன்.

பாகன் : கட்டிக் கரும்பே. என்னை நீ மறந்தால். இறந்தேன். போய் வா.

# கெட்ட சேதி

## களம் - 6

அரசன் : தோழி சுநீதி "வேட்டைக்குச் சென்று வந்தார் அரசர்" என்று உன் தலைவிக்குக் கூறு.

சுநீதி : முன்னே ஒரு சேதி அரசே! இராத்ரி அரசி உப்பரிகை நிலா முற்றத்தில் இருந்தார். நான் இருந்தேன். பாட்டொன்று கேட்டது காதில். பரவசப் பட்டார்கள் ராணி. அவன் யார் என்று பார்த்து வரச் சொன்னார்கள். பார்த்து வந்தேன். பிறகு அவனிடம் தனியே ராணி சென்று வந்தார்கள், தடுத்தும் கேளாமல்.

அரசன் : என்ன! ... ... அவன் யார்?

சுநீதி : அதை ஏன் கேட்கிறீர்கள். யானை கட்டும் கூடத்தில் நோய் கொண்டு கிடக்கும் பாகன்!

அரசன் : பரம்பரைக் கீர்த்தி ஒடிந்தது. முடிந்தது என் இன்ப வாழ்க்கை. தோழியே மனதில் வை. வெளிப்படுத்தாதே. ஐயோ!

சுநீதி : அரசே, ராணி தினமும் போகிறார்கள். இன்றிரவும் அவனிடம் போக ராணி எத்தனிப்பார்கள்.

அரசன் : ஐயோ ... நீ போ ...

## அவன் மேல் நெஞ்சம்

## களம் - 7

தத்தை : நாதா, இந்த இரவும், சித்தப்படுத்தப்பட்டிருக்கும் இந்த சப்ர மஞ்சமும் எனக்கு ஒரு பயனும் விளைக்கப்போவதில்லை. ஒரு நாளில் வந்து விடுவதாய்ச் சொல்லி மூன்று நாள் கழித்து வந்த காரணம் என்ன? சொல்லுங்கள்!

அரசன் : காட்டில் துஷ்டமிருகங்கள் எதேஷ்டம்.

தத்தை : நல்ல காரணம்! என்னிடம் பேசாதீர்கள். நான் தனியே துயில்வேன். நான் உங்கட்கு வேம்பு.

அரசன் : இல்லையே நீ எனக்குக் கற்கண்டு ... ... தூங்கிவிட்டாயா ... தத்தையே ... அப்படியா ... உம் ...

## பின் தொடர்ந்தான்

## களம் - 8

அரசன் : யாரடா காவற்காரன்?

காவற்காரன் : யார்?

அரசன் : நான் அரசன், கூவாதே, இந்த வழியாக ராணி சென்றாளா சற்று நேரத்தின் முன்?

காவற் : தினம் போவது போல்தான் இன்னைக்கும் போனாங்க. அவுங்களை இத்தனை நாள் தோழிண்ணு நெனச்சேன் மகாராஜா.

அரசன் : மனதில் வைத்துக்கொள். நான் போகிறேன்.

## கண்ணெதிரில்

## களம் - 9

அரசி : யார் அங்கே. ஏற்றுங்கள் விளக்கை.

பாகன் : விளக்கையா ஏற்ற. ஏற்றினேன். ஏண்டி, ஏன் இத்தனை நேரம்? (ஒரு குட்டு அவள் தலையில் குட்டுகிறான்.)

அரசி : ஐயோ இல்லை. அந்தப்பாவி அரசன் சீக்கிரத்தில் தூங்க வில்லை. கோபம் கொள்ளாதீர்கள். இந்தப் பக்ஷணங்களை அருந்துங்கள்.

பாகன் : ... ... ஆஹா. தத்தையே, இன்று பக்ஷணங்கள் வெகு நேர்த்தி. ஏண்டி உன்னைக் குட்டினேனே தலையில்? நொந்ததா உனக்கு?

அரசி : குட்டு அல்ல அது. என் நெஞ்சத்தில் வீழ்ந்த அமுதத் தின் ஒரு சொட்டு.

பாகன் : ஓகோ அப்படியா ... ...

அரசி : நாதா, ஒரு பாட்டு

### பாட்டு - 3

டி.கே. பட்டம்மாள் பாடிய வள்ளி கணவன் பேரை
என்ற கிளிக்கண்ணி மெட்டு

**கானில் தவம்புரிவார் கண்டுவிட்ட காதற்கனா**
**தேனாகப் பாயுமடி - கனியே**
**சிந்தையெல்லாம் தோயுமடி!**

பாகன் : நீ ஒன்று முதலில் (அரசி பாடுகிறாள்)

தத்தை : **பஞ்சரக் கிளியும் வண்டும் பற்பலவும் பூமியிலே**
**சஞ்சரித்தால் காதலினால் - மதனா**
**சாவதுவும் காதலினால்!**

பாகன் : தேன். நான் பாடட்டுமா? (பாகன் பாடுகிறான்)

பாகன் : அஞ்செழுத்தும் எட்டெழுத்தும்
அருமறையின் நெட்டெழுத்தும்
கொஞ்சவரும் காதலுக்கே - கனியே
கூட்டெழுத்தே யாகுமடி!

அரசி : அமுதம். நேரமாகிறது. நான் போய் வருகின்றேன் நாதா.

பாகன் : நாளை ராத்திரிக்கு!

அரசி : ஓ ... ... !

## கபட நாடகம்

## களம் - 10

அரசன் தாய் : ஏண்டி தத்தே?

தத்தை : ஏன் அத்தே?

அத்தை : என்ன ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?

தத்தை : கொஞ்ச நாளாக உங்கள் குமாரர் என்னிடம் நன்றாகப் பேசுவது கிடையாது. என்னைக் காணப் பிடிக்கவில்லை அவருக்கு. அதற்கு ஏதாவது காரணம் தெரியுமா மாமி.

அத்தை : தெரியாதே. பிள்ளை நல்லவனாச்சே. நீ என்ன செய்தாயோ?

தத்தை : நான் ஒரு பாவத்தையும் அறியேன். அவர் சந்தோஷமே என் வாழ்க்கை இலக்ஷியம். அவருடைய அன்பு ஓர் அணு - ஓர் இம்மி ஐயோ ... அத்தே தவறியதே கிடை யாதே. அவர்தாம் வேறு எவள் மேலோ காதல் கொண்டிருக்கிற மாதிரி தோணுது.

அத்தை : வருந்தாதே! நான் சாவகாசமாகக் கேட்கிறேன். அரசன் கொலுவுக்குப் போகும் நேரமாயிற்று. அலங்கரித்துக் கொள். ஆயத்தப்படு. அதோ தோழி வருகிறாள்.

தோழி : ராணியாரே ... அரசர் கொலுவுக்குப் போகிறார். புறப்படுங்கள் சீக்கிரம்.

தத்தை : இதோ...

## பூப்பட்ட காயம்

## களம் - 11

(மங்கல வாத்தியம் முழங்குகிறது. முரசு ஒலிக்கிறது)

வாழ்த்துநர் : நிறைகோல் போல முறை கோணாமல் ஆட்சி செலுத்தும் மாட்சி மன்னர் வந்தார் கொலுவில்.

பிறர் : பராக்!

வாழ்த்துநர் : திங்கட்குடைக்கீழ் - தங்கும் வலிமைச் சிங்கப் புரவலர் வந்தனர், கொலுவில்.

பிறர் : பராக்!

வாழ்த்துநர் : அற்புத சித்ரப் பொற் ப்ரதிமைச் - சீர்க் கற்பு மிகுந்த ராணியார் வந்தனர் கொலுவில்.

பிறர் : பராக்!

அரசன் : மந்திரி ப்ரதானிகள் அனைவரும் அமர்ந்திருங்கள். சௌக்யந்தானே அனைவரும். நமது கொலுவை நாட வந்திருப்பவர்களை வரவிடுக.

ப்ரதானி : புலவர் ஒருவர் சமூகத்தை நாடி வந்திருக்கிறார் ப்ரபு!

அரசன் : வரட்டும்.

'திங்கட் குடையான் ஜெயபால மன்னனென்றால்
சிங்கப்பேர் கேட்டதுபோல் தீயபகை - எங்குப்போய்
வீழ்வதென ஏங்கும் விறலுடையாய் காலமெல்லாம்
வாழ்கநீ உள்ளம் மகிழ்ந்து'

அரசே, இந்தக் கனிவர்க்கத்தையும், பூங்கொத்தையும் அங்கீகரிக்க வேண்டுகின்றேன்.

அரசன் : கொடும் ...

அரசி : ஆ! என்ன செய்வேன், வலி தாங்க முடியவில்லையே.

### பாட்டு - 4

அரசர் :

(அரிச்சந்திராவில் "ஆரடி நீ இங்குவந்த தாரடி நீ" என்ற மெட்டு)

என்னடி நீ காட்டுகின்றாய்
சின்ன பூங்கொத்துப் பட்டதாலே
சென்னி நொந்துவிட்ட
தென்று ஜாலம் பண்ணுகின்றாய் - (என்)
குஷ்ட ரோகிதான் கொட்டும் போது
கஷ்டம் உனக்கில்லை
புஷ்பம் பட்டதாலா தொல்லை? (என்)
(வசனம்) நீலி, புலவர் தந்த....
... ... ... பழிகாரி!

அரசன் : புலவர் தந்த பூங்கொத்தை உன்னிடம் கொடுக்கவேண்டும் என்ற முறைப்படி அப்பூங்கொத்தை உன்னிடம் நீட்டினேன் அப்பூங்கொத்து உன் தலையில் பட்டது. இந்த வலியை உன்னால் தாங்கமுடியவில்லை. பூப் பட்டதும் வலி தாங்காத உன் சிரசு, இராத்ரி - அந்த நோயாளி பாகன் 'ஏன் இத்தனை நேரம்' என்று குட்டியதைத் தாங்கிற்றல்லவா? பாசாங்குக்காரி, பழிகாரி!

மந்திரி : ஹா, என்ன அரசர் சபையை விட்டுப் போய்விட்டாரே.

### துறவு

## களம் - 12

அரசன் : அந்தப்புரத் தோழியே, நான் பார்க்க வந்திருப்பதாக என் அன்னைக்குக் கூறு. அம்மா அம்மா. வாருங்கள் வணக்கம்.

## பாட்டு - 5

(பூகைலாஸ், "எப்படிப் பிரிகுவேன் என்றன் ஆத்மலிங்கம் தனை" என்ற மெட்டு)

ராகம் : சாரங்கா தாளம் : ஆதி

**பூமி ஆசை தீதே அம்மா - போகமோ நிலாது**
**மண்மேல்**
**போமித் தேகம் நீ தமாமோ? போதன்பாதம்**
**நாடவேண்டும்**
**காதல் மாதர் மோகம் அதே - கெடுகாலமாகும்**
**அம்மா**
**சாதல் உண்டு நோய்கள் உண்டு**
**சாந்தன் பாதம் நாட வேண்டும்!**

எனக்கு விடை கொடுங்கள். மனைவி, உறவினர்களுடன் இருந்து இல்லறம் நடத்தி அதனால் ஏற்படும் ஓயாத தொல்லை களைவிட அவர்களை விட்டு நீங்கியிருப்பது நல்லதென்ற முடிவுக்கு வந்தேன். சதுரங்க சேனையும், வெண்கொற்றக் குடையும், விருதும் பிறிதும் கொண்டு புவி ஆளும் ஆட்சியை விட அவற்றி னின்று மீளும் மீட்சி சிறந்தது, என்று தோன்று கிறது. முட்புதர் போல் வஞ்சம், சூழ்ச்சி, பொய்மை நிறைந்த இவ்வுலக வாழ்வில் புரண்டு இனியும் இன்னலுறுவதாக உத்தேச மில்லை. ஊரார் சதமா? உற்றார் சதமா? உற்றுப் பெற்ற தாயார் சதமா? தந்தை சதமா? உம் இல்லவே யில்லை. செல்வம், இளமை, காயம் இவை நிலை நிற்பனவா. இல்லவேயில்லை. ஏகாந்தம் சிறந்தது. பிறக்கின்றான், மூப்படைகின்றான், இந்தப் பெருமை தான் மனிதனுக்கு உண்டு. பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில் ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பாவம், தோற்றம், வினைப்பயன் ஆகிய நிதானங்களை உலகிற் பிறந்தவர் அறிந்தாராயின் பெறும் பேறு அறிந்தவர். அறியா விடில் பாழ் நரகைத்தான் அறிந்தார்கள். ஆதலால், மனிதன் பெறத்தக்கப் பேறு வேறு உண்டம்மா. உள்ளங் கசிந்து அறம் உரைத்தோன் அடிகாக்க! நான் போகின்றேன் உறுதி தேடி.

### பாட்டு - 6

(பல்லவி)

வனிதையர் நேயம் மிகவும் அபாயம்
மாயா புவன மிதே - மனமே (வனி)

(அனுபல்லவி)

புனைந்த பொய்யுலகம் தினமதில் கலகம்
பொருளால் இருளடைந்தாய் - மனமே(வனி)

(சரணம்)

ஆட்சியி னாலே மீட்சியுண்டாமோ
அகங்காரம் தொலைப்பாய் - மனமே
சாட்சியும் அவனே சர்வமும் அவனே
சரணமென் றடைவாய் நீ மனமே! (வனி)

தாய் : ஆ, அப்பா, அப்பா, நான் துஷ்டக் கனவு காண்கின்றேனோ? அப்பா ... அப்பா ...

### அத்தை, தத்தை

## களம் - 13

அன்னை : தத்தே! ஐயோ, என் கண்ணே, உன் நாதன் காட்டுக்குச் சென்று விட்டானடி.

தத்தை : என்ன செய்வேன் அத்தே. என்னிடம் சொல்லக்கூட வில்லையே. நான் என்ன செய்வேன்? அரசர் இத்தனை ஐஸ்வரியங்களையும் விட்டுக் காட்டுக்கு ஏன் போனார். உங்களுக்குக் காரணம் தெரியாதா?

அன்னை : உலக வாழ்வை அவன் வெறுத்தாண்டியம்மா. நீ கர்ப்பவதி என்பதையும் அவன் யோசிக்கவில்லையே. ஐயோ என் மனம் வேகிறதே. குடிகளின் கதி என்ன ஆவது?

தத்தை : நமது யோசனைப் படி மந்திரி ஆண்டு வரட்டுமே அத்தே!

அன்னை : மருமகளே. நீ புத்திசாலி. ஆட்சிமுறை தெரிந்தவள். அப்படித் தான் செய். ஐயோ நினைக்க நினைக்க என்மனம் உருகு கின்றதே.

தத்தை : என் மனங் கூடத்தான், அத்தே! நெருப்பிலிட்ட வெண்ணெய் மாதிரி உருகுகின்றது. எனக்கு உத்தரவு கொடுங்கள் அத்தே, தனியே போய்க் கொஞ்சநேரம் அழுது கொண்டிருக்க.

அன்னை : எப்படியடி சகிப்பாய்? ஐயோ, ஐயோ!

## தத்தையின் சந்தோஷம்

## களம் - 14

பாகன் : என்னாடி தத்தை, மாளிகையில் என்னமோ நூதனமாமே.

தத்தை : நாதா, அதான் சொல்ல ஓடிவந்தேன். ஒரே ஓட்டமாய்.

பாகன் : மெய்தானா அது?

தத்தை : மெய்தான். தொல்லை ஒழிந்தது. பெற்றவள் மனம் என்னமோ சகிக்கவில்லை. அவள் அழுகிறாள், பாவம்.

பாகன் : உனக்கு எப்படி?

தத்தை : ஒரே ஆநந்தந்தானே, இனி நீங்கள் இங்கே இருக்க

பாகன் : உம்.

தத்தை : யாருக்குத் தெரியப் போகிறது! தெரியட்டுமே அப்படித்தான்! நான்தான் அரசி. என் உத்தரவுப்படி நடக்க வேண்டியவர் கள் மந்திரிப் பிரதானிகள். எழுந்திரும்.

பாகன் : சரி ... நட. எனக்கு வந்த யோகமே யோகம்.

## இருவர் பாட்டு

## களம் - 15

(தத்தை - பாட்டு; பாகன் - பாட்டு)*

**தத்தை** : நாதா எனக்கு பிரசவநேரம் கிட்டிவிட்டது என்று நினைக்கிறேன். வலி தோன்றுகிறது. நான் அந்தப்புரம் போகிறேன்.

**பாகன்** : சரி

**தத்தை** : தோழி. அத்தைக்கு என் நிலைமையைக்கூறி அழைத்துவா.

## யசோதரன் ஜனனம்

## களம் - 16

**சுநீதி** : அம்மா, அரசி பிரசவ வேதனை அடைகிறார்கள்.

**அன்னை** : வேண்டிய ஏற்பாடுகளைச் செய். என் மகனின் அம்ஸம் வெளிப்படப் போகிறது. தத்தை சுகமாக ஓர் ஆண் பிள்ளையைப் பெற்றெடுக்கணும்.

**தத்தை** : அத்தே. நான் சுகமாக ஓர் ஆண் குழந்தை பெற்றால், மாவினால் கோழிசெய்து தெய்வத்துக்கு பலியிடுகிறேன்.

குழந்தை அழுகிறது

**சுநீதி** : அம்மா, ஆண் குழந்தை

**அன்னை** : அம்மா எனக்கு ஆறுதல் ஏற்பட்டது. குடிகள் அரசனைப் பெற்றார்கள். நான் பேரனைப் பெற்றேன். தத்தை தனக்கொரு பிள்ளை பெற்றாள். தாயும் சேயும் சௌக்யமாக இருக்கணும்.

* பாட்டு கிடைக்கவில்லை

## தத்தையின் சந்தோஷம்

## களம் - 17

பாகன் : தத்தே, குடிகள் எல்லாரும் சந்தோஷப் பட்ராங்கடி நீ ஆண் குழந்தை பெற்றதால்.

தத்தை : உங்கட்கு எப்படி?

பாகன் : சந்தோஷந்தான் ஊராள ஓர் அரசன் வந்தானல்லவா?

தத்தை : எனக்கென்னவோ சந்தோஷமில்லை. இந்தப் பிள்ளை அந்த அரசன் அம்ஸம்

பாகன் : உனக்கு என் மேல் உள்ள ப்ரேமை அளவு கடந்தது. குழந்தையைப் பத்திரமாகப் பார்த்து வா. ஆக வேண்டிய கர்மங்களைச் செய்யச் சித்தம் செய்யச் சொல். நான் அடுத்த மலர் மஞ்சத்தில் படுத்திருக்கிறேன்.

## ஊர்ப்பேச்சு

## களம் - 18

ரகு : ஜெயபால மன்னர் காடு சென்று எத்தனை வருடமிருக்கும் ரஞ்சிதா?

ரஞ்சிதன் : இருபத்தோர் ஆண்டு ஆகிறது. அவர் காடு சென்ற சில மாதங்களில் யசோதரன் பிறந்தார். யசோதரனுக்குப் பட்டம் கட்டப் போகிறார்கள். பிள்ளைக்கு ஏற்பட்ட இந்தப் பாக்கி யத்தை அவர் தந்தை பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை, பாவம்.

ரகு : இந்தத் தந்தை பார்க்கிறார் அல்ல.

ரஞ்சிதன் : வெட்கக் கேடு. ரோகியை - பாகனாகிய வேலைக்காரனை - அரண்மனையில் கொண்டுவந்து வைத்திருக்காளே அந்தத் தத்தை.

ரகு : பாகன் தூங்க புஷ்ப மஞ்சம்! உண்ணுவது அரச உணவு! உடுத்துவது, இழையால் ஆயிரம் பெறத்தக்க பீதாம்பரம்!

## தண்டோரா

## களம் - 19

தண்டோராக்காரன்: டும், டும், டும்.

'தத்தை ராணி புத்ரர்
உத்தரஸ்தானத்தின் அரசரென்று
பட்டங் கட்டப் பெரியார் இட்ட நாள்
நாளைய சுபதினமாகும். நகரை
அலங்கரிக்க அனைவரும் விஜயஞ் செய்க'

## தாயும் சேயும்

## களம் - 20

தத்தை : அப்பா குழந்தாய் யசோதரா, நீ நாளைய தினம் பட்டாபிஷேகம் செய்து கொள்ளப் போகிறாய். பிரசவம் ஆகிற காலத்தில் நான் செய்த பிரார்த்தனையை நிறைவேற்ற வேண்டும்.

யசோதரன் : அரசன் வீட்டில் அன்னத்திற்கும் பஞ்சமா அம்மா? இன்னதென்று சொல்லுங்களேன்.

தத்தை : மாவினால் சேவற்கோழி செய்து தெய்வத்திற்குப் பலி கொடுக்கிறதாகப் பிரார்த்தனை செய்தேன்.

**பாட்டு - 7**

யசோதரன் :

(‘புகார்’ இல் “கீத சுளா போக் ரெசைய்யா” என்ற மெட்டு)

(பல்லவி)

ஜீவ வதை தாயே நன்றாமோ?
ஜீவ வதை தாயே நன்றாமோ? (ஜீவ)

(அனுபல்லவி)

பாவமும் பழியும் ஏற்றிட லாமோ?
நாவும் கூசாதோ? நம் போன்ற (ஜீவ)

(சரணம்)

தன்னுயிர் போலே மன்னுயிர் தன்னை
எண்ணல் நம்கொள்கை! நம்போன்ற (ஜீவ)

யசோதரன் : ஐயோ அம்மா, கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்வது அல்லவா நம் மதம். மக்கட்கு மக்கள் மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் இன்னல் சூழ்வதும் மற்ற 84 லக்ஷம் ஜீவராசிகட்கும் ஹிம்சை நேராவண்ணம் நடந்து கொள்வதும், நமது வாழ்க்கை முறையல்லவா?

ஜீவனைப் பலியிட மனிதன் விரும்பக்கூடாது என்பதே அறஞ்சொன்ன அடிகள் ஆக்ஞை யாயிருக்க, தெய்வமும் பலியை நாடுகிறது என்ற கொள்கையை நாம் மேற் கொள்வதா தாயே? தெய்வம் உயிர்ப்பலி கேட்குமானால், ஜீவ உலகம் எத்தனை நாளைக்கு இருக்க முடியும்?

தத்தை : உயிர்ப்பலி கொடுக்கச் சொல்லவில்லையே! யசோதரா.

யசோதரன் : மாவினால் இயற்றிய கோழிதான். இருக்கட்டும். மாவைத் தெய்வத்துக்குப் படையுங்கள். மாவினால் ஆக்கிய உருவத்தைப் பலியிடச் சொல்கின்றீரே. ஜீவனைக் கொல்

லுவதோ, கொல்லுவதற்கு ஒப்பாகிய எண்ணத்தை அடைவதோ, அடுக்குமா? உயிர்க் கோழியைப் பலியிடுவதற்கும், மாக்கோழியைப் பலியிடுவதற்கும், சிறிது வேற்றுமை தவிர, பூர்வாங்க நோக்கம் ஒன்றுதானே அம்மா.

தத்தை : அப்பா யசோதரா, நான் பிரார்த்தனை செய்து விட்டேன். ஜீவஹிம்ஸை வேண்டாம் என்கிற நீ என்னை ஹிம்சை செய்யாமல் என் மனதைப் பூர்த்தி செய்ய வேண்டுமல்லவா?

யசோதரன் : தாயே, உன் மனதிற்கு இம்ஸையை உண்டாக்காதிருக்க நான் இன்றுவரை எவ்வளவோ பொறுமை காட்டி வந்திருக்கிறேன்.

மேலும் மேலும் உங்கள் விஷயத்தில் அஹிம்ஸையை மேற்கொள்வதால் என் அஹிம்சா தர்மத்தின் வேரையே நான் அறுத்துக்கொள்ள நேர்ந்து விட்டது. உன் மனத்தை ஹிம்ஸை செய்யாதிருக்க நம் மதத்தையே இம்ஸிக்க வேண்டுமா?

தாயே, நான் ஒப்புகின்றேன். தாய்க்குசேய் செய்ய வேண்டிய தியாகம் இதுவானால் நான் மறுக்கவில்லை. உம் ... ஆரடா சேவகன். சிற்பிக்கு ஆக்ஞையிடு மாக்கோழி ஒன்று செய்யும்படி!

## ஜீவ சிற்பம்

## களம் - 21

**சின்னம்**

**ஊதப்படுகிறது**

**உடுக்கைச் சத்தம்**

**பம்பைச் சத்தம் கேட்கிறது**

பூசாரி : இந்தப் படையலுக்கு எதிரில் கொண்டு வந்து வை அந்த மாக் கோழியை. யசோதர மன்னர் இப்படி வந்து அமர்க. அரசர் அன்னையார் வந்து அமர்க.

யசோதரன் : ஆஹா, மாக் கோழியா, உண்மைக் கோழியா என்ன அழகிய சிற்ப வேலை, பூசாரியே ஆகட்டும் பூசை.

பூசாரி : சீர்காக்கும் தெய்வமே
சிந்தித்தோம் உன்னையே
பேர்காக்க வேண்டும் நீ
பெற்றோரைக் காப்பாய் நீ
ஊர்க்காக்க வேண்டும் நீ
உற்றாரைக் காக்கணும் நீ
கூர்ந்த மகிழ்ச்சியினால்
கோழி பலி கொண்டிடுவாய்.

... ... அது தலையை ... ...

கோழி : 1. கொக்கோரிக்கோ

2. கொக்கோரிக்கோ

3. கொக்கோரிக்கோ

அனைவரும் தனித்தனியாக

ஆஹா!

அட!

என்ன?

மாக்கோழி கூவிச்சே!

யசோதரன் : என்ன ஆச்சரியம்! என் குடிக்கு ஏற்பட இருக்கும் தீமையின் அடையாளமா?

## பாட்டு - 8

(பூகைலாஸ், "பாராய் பாராய் வனிதாமணி பாராய்" என்ற மெட்டு)

இவளா?

(பல்லவி)

தாயே தாயே என்ன மாயமோ அறியேன் (தாயே)

(அனுபல்லவி)

வாயும் திறந்து மாக்கோழியதே
கூவிய மர்மக்குறி அறிகிலன் (தாயே)

(சரணம்)

பின்னர் விளையும் இன்னல்
முன்னர் காட்டும் குறியோ
சென்றே இதனைக் கேட்பேன்
இன்றே பெரியார் இடமே

ஐயோ தாயே. நான் முன்னமே வேண்டாம் என்றேனே ... பெரியோரை அடுத்து இதன் உண்மையைத் தெரிந்துகொள்ளு கிறேன். ஆலோசனை மண்டபம் செல்கின்றேன்.

## அடிகள் ப்ராப்தம்

## களம் - 22

சேவகன் : அரசே! சேவித சரணர் எழுந்தருளுகின்றார்.

யசோதரன் : ஸ்வாமி! என் சிந்தனையுணர்ந்து எழுந்தருளினீர்கள் என்று எண்ணுகிறேன். எழுந்தருளுங்கள் ஆசனத்தில்!

சேவிதசரணர் : நலன் அடைக.

யசோதரன் : அடிகளே, என் தாயின் பிரார்த்தனைப்படி மாக் கோழியைப் பலியிடுங்கால் அம்மாக்கோழி மூன்று தரம் கூவி உயிர்விட்டது. அதன் பொருள் இன்னதென்று தோன்றவில்லை.

சேவித : யசோதரா, பிறவா நெறி அடைவது தான் மனிதன் அடையவேண்டிய பேறு. உன் தந்தை அப்படிப்பட்ட பெரிய பேறு அடையத் தக்கவனே. ஆயினும் அவன் மனைவி தத்தை கற்பிழந்தாள். கற்பிழந்த அவள் மாக்கோழி பலியிடவும் பிரார்த்தனை செய்தாள். இவை உன் தந்தையின் நற்கதியைக் கெடுத்தன. மாக்கோழி மூன்று முறை கூவிற்று. உன் தந்தை மூன்று பிறவி பிறந்து, பின் பிறவா நெறியடைவான். உன்தாய் அதை யுணர்ந்தாள். அதனால் உன் தந்தைக்கு ஏற்பட்ட சஞ்சலமும் உலகப்பற்றும், மூன்று பிறவி தொடர் கின்றன. என் செயலாம், உலக வியாபாரத்தை விட்ட போதல்லவா வீடு சித்திக்கும். உன் தாயின் செயல் உன் தந்தையை உலகிலிருந்து விடாதபடி பந்தித்தது. நான் சென்று மற்றொரு காலம் வருகின்றேனப்பா.

## அஹிம்ஸை

## களம் - 23

யசோதரன் : கலித்துறை - கட்டளைக் கலித்துறை. நேரசையில் தொடங்கி. ஐஞ்சீரடி நான்காய் அடிதோறும் பதினாறு எழுத்துப் பெற்று வருவது)

**'மீனாக்க னற்குள் விழுந்த புழுப்போல் துடிப்பதற்கே**
**ஆளாக்கி என்சீர் அதமாக்கி வாழ்வும் அகன்றதெனும்**
**நாளாக்கி நெஞ்சை நலிவாக்கி நான்பெற்ற நன்மையெலாம்**
**தூளாக்கி விட்டதே என்அன்னை எண்ணுமோர் துர்க்குறியே!..'**

யசோதரன் : மந்திரி! அவமானத்திற்கு உடல் எடுத்தேன். நான் உலக மக்களின் காவலன். கல்வியில் நாவலன். கொடையில் கன்னன். தரணியின் மன்னன். இந்தக் கௌரவமெல்லாம் என்னுடன் பிறந்தன. ஆயினும் ஒருத்தியின் துர்நடத்தை யால் அனைத்தும் பறந்தன. ஆஹா! துர்நடத்தை கொண்ட தாயைத் தந்தை தண்டிக்கவில்லை. அஹிம்ஸா தர்மர் அவர். அஹிம்ஸை! நல்ல அஹிம்ஸை! ... அந்த அஹிம் ஸையே காரணம் என் தந்தையின் பிறவிக்கு. குற்றங் கண்டபோதே என் தந்தை தண்டித்திருந்தால் மன நிறைவு ஏற்பட்டிருக்கும் அவருக்கு. பிறவிக்குக் காரணமில்லாமல் போயிருக்கும்.

ஒரு குடியில் ஒருத்தியின் தீச்செயல் அக்குடியின் பல தலைமுறைகளிலும் சென்று அனைவர்க்கும் அவ மானத்தையும் அளவிலாத் துன்பத்தையும் ஏற்படுத்து கின்றது என்மனம் பற்றுக. நீதியின் நிலவுக, கொஞ்சநாள் வாழ்வு. பிறவா நெறி ஒன்றே சத்யம். அதில் துன்பமில்லை. உலகம் யாவும் பெருங் கனவு. அஃதுளே உண்டு, உடுத்து இடர்செய்து செத்திடும் கலக மானிடப் பூச்சியின் வாழ்க்கையோர் கனவினும் கனவு அன்னது.

நன்னெறி நடப்போம். மானமும் அவமானமும் செறிந்த இந்த உலகுக்கு நாம் பலியாகாமல் அரசாட்சி நடத்துவோம்.

## பசங்கள் ஆச்சரியம்

## களம் - 24

முத்து : அடசீனு, இங்கு ஓடியாயேன். தெரியுமா சேதி. எங்கப்பா பேசிகினு இருந்தாங்களே.

சீனு : உங்க அப்பா பேசியிருந்தா அது எனக்கு எப்பிட்ரா தெரியும்?

முத்து : தெரியாட்டி சொல்றேனே. நம்பராஜா ஒரு வெள்ளெ கண்ணு குட்டி வாங்காந்து வளத்து வந்தாரே தெரியுமா ஒனக்கு?

சீனு : ஆமாம். என்ன அதுக்கு?

முத்து : பூட்டுதுடா

சீனு : ஐயே என்னா எழவுடா அது.

முத்து : ராணி கூட இருக்காரு பாரு, ஒரு மம்மதன். அந்தப் படவா பயன கொண்ணுட்டுது அது.

சீனு : கொண்ணுட்டுதா? ரொம்ப சந்தோஷண்டா எனக்கு.

முத்து : அதோட்டு அதெ வெட்டிபுட்டாங்க.

சீனு : மனசு என்னமோ மாதிரி இருக்குதுடா; எனக்கு அரசர் தவத்துக்குப் போனதுக்குக் காரணம் அந்த நோயாளி செஞ்ச அக்குறும்புதான். அதான் அந்த ராஜா மாடா வந்து கொண்ணு குழியிலே வச்சுட்டாரு.

முத்து : அதாங் கதை. நான் போரேன்.

சீனு : நானுந்தான். போவணும் - பூட்டவா.

## திண்ணைப் பேச்சு

## களம் - 25

சொக்கலிங்கம் : என்ன சுந்தரம் 5,6 மாசத்துக்கு முந்தி அந்த மாடு. எந்த மாடு.

சுந்தரம் : ராஜா வீட்டுமாடு.

சொக்க : பாகனை கொண்ணு போட்டுது. எந்தப் பாகனைப் கொண்ணு போட்டுது.

சுந்தரம் : ராணி வச்சிருந்த பாகனை.

சொக்க : அந்த மயில்! ... எந்த மயில்.

சுந்தரம் : ராஜா வளர்த்தாரே அந்த மயில்.

சொக்க : அந்தப் பத்தினி இருக்காளே - எந்தப் பத்தினி?

சுந்தரம் : தத்தை

சொக்க : அவ கண்ணைக் கொத்திட்டுது. என்னாத்தை கொத்திபுட்டுது?

சுந்தரம் : சொல்லித் தொலையேன். சரி கண்ணை.

சொக்க : வேணும் அவளுக்கு. என்னா வேணும் அவளுக்கு?

சுந்தரம் : இந்தத் தண்டனை

சொக்க : அவ இருக்காளே. எவ இருக்காளே?

சுந்தரம் : சொல்லித் தொலையேன். அவதான் தத்தை

சொக்க : அநுபவிக்கிறா. எதை அநுபவிக்கிறா?

சுந்தரம் : அட சீ போ. முன்னே செய்ததின் பலனை. சரிதான் நிறுத்து. ஓங்கிட்ட பேசறதேவிட சும்மா இருக்கலாம்.

## கழிவிரக்கம்

## களம் - 26

சுநீதி : தாயே ஏன் விசனமாக உட்கார்ந்திருக்கிறீர்கள். போசனத்திற்கு எழுந்திருங்கள்.

தத்தை : தோழியே. பசியும் என்னை அண்டவில்லை. தத்தை என்ற என் பேர் சொன்னால் இகழாதவரில்லை. அப கீர்த்திக்கு ஆளானேன். என் ஒரு கண்ணைக் கொத்திய அந்த மயில் என் பிராணனை ஏன் வைத்தது, நான் எதற்காக இந்த உலகில் இருக்க வேண்டும்? சங்கீதம், கவிதை, ஓவியம் முதலிய கலைகள் மாயையின் பரிவாரங்கள்.

சுநீதி : அவை தக்கோர் அறிவின் பிரதிபிம்பம் என்கிறார்களே அம்மா?

தத்தை : ஆம்... உண்மை... கலை ஞானங்கள் தீயவையல்ல. அவைகளை மேற்கொள்ளும் மனிதர்கள் தீயவரா யிருக்கலாம்.

சுநீதி : எழுந்திருங்கள் அம்மா

தத்தை : இதோ வருகின்றேன். கொல்லைப்புறம் போய்க் கைகால் சுத்தம் செய்துகொண்டு

சுநீதி : போய் வாருங்கள்......

**(கொல்லைப்புறத்திலிருந்து) ஆ ... ...!**

சுநீதி : என்ன என்ன ... ... ஐயோ, தத்தையம்மாவை ஆடு குத்திவிட்டதே.

ஐயோ இறந்துவிட்டார்களே. ஓடிவாருங்கள்.

பலர் தனித்தனியே:

“ஐயையோ ராணியம்மா இறந்து விட்டாங்க”

“அரசருக்குச் சொல்லுங்கள்”

"உங்கள் தாயை ஆடு கொன்று விட்டதென்று அரசரிடம் கூறு. அழைத்துவா"

அரசரே, இதோ பாரும் தங்கள் அன்னை ஐயோ இறந்து விட்டார்கள்.

யசோதரன் : அந்தோ தாயே இறந்தீரா? மறந்தீரா என்னை? வினைப் பயனை வெல்வதற்கு வேத முதலா எனைத்தாய நூலகத்துமில்லை. யாரடா சேவகன், அந்த வாளாயுதத்தை எடுத்து வா.

சேவகன் : இந்தாங்க.

யசோதரன் : துஷ்டக் கடாவே, மீளாத விடைபெற்றுக் கொள்.

சேவகன் : அதுதான் வேண்டும்.

(அதற்குள் இரண்டு துண்டாக விழுந்தது.)

## தெளிவு

## களம் - 27

சேவகன் : அரசே, சேவித சரணர் எழுந்தருளுகின்றார்கள்.

யசோதரன் : அடிகளே சரணம். தங்கள் வருகையால் புனிதனானேன். என் குடிக்கு ஏற்பட்ட இன்னல்கள் அபகீர்த்திகள் அனைத்தும் தாங்கள் அறிந்தவை.

சே.சரணர் : அப்பனே, உன் தந்தை அடையவேண்டிய மூன்று பிறவிகள் தீர்ந்தன.

யசோதரன் : எப்படி ஸ்வாமிகளே?

சே.சரணர் : மாடாகப் பிறந்தார். உன் வீட்டில் வளர்ந்தார் - பாகனை மாய்த்தார்.

யசோதரன் : ஆஹா! என் தந்தைதானா?

**சே. சரணர்** : பின்னர் மயிலாகப் பிறந்தார். அன்னையின் கண்ணைக் கொத்தி மாண்டார். அதன்பின் ஆடாக உன் தாயைக் கொன்று வஞ்சம் தீர்த்தார். பிறவா நெறியடைந்தார்.

**யசோதரன்** : ஞான லோகத்தை நோக்கிச் செல்ல வைத்தீர்கள். ஸ்வாமி என்னை.

**சே. சரணர்** : யசோதரா! தெளிவு பெற்றாய். மயக்கம் அறுத்தாய். சிறிது காலம் இந்த ராச்சியத்தை ஆண்டு, பின் உபதேசத்திற்குப் பாத்திரனாகக் கடவை.

வறுமை வந்த போதும், செம்மை அடைந்த போதும், அல்லன புரியாத நேர்மை வேண்டும் உனக்கு. எதிலும் பற்றுக் கொள்ளாமல் விடுதலை மேற்கொள் ஊருக்குழை.

**யசோதரன்** : ஸ்வாமி நான் க்ருதார்தன்.

■ ■ ■